## கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 13.03.2026 ந் தேதி நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை வணிக வளாகத்தில் இயங்கி வரும் நகராட்சி கடைகளுக்கு 2025 – 2026 ஆம் நிதியாண்டுக்குண்டான வாடகை நிலுவையினை செலுத்த கோரி பல்வேறு அறிவிப்புகள் வாயிலாகவும், நேரிலும் பலமுறை அறிவுறுத்தப்பட்டது. மேற்படி கடைகளுக்கான நிலுவை வாடகை தொகைகளை செலுத்தாத கீழ்கண்ட கடைகளை நகராட்சி மூலம் 04.03.2026 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது.

| வ. எண். | வரிவிதிப்பு எண் | கடை எண் | குத்தகைதாரர் பெயர் | நிலுவை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 057/SC03/00135 | A 17 | P.R.சசிநாராயணன் | 1,62,486 |
| 2 | 057/SC03/00136 | A 18 | K.ராஜேஸ்வரி | 1,61,424 |
| 3 | 057/SC03/00137 | A 19 | G.V.பாரதி | 1,61,424 |
| 4 | 057/SC03/00139 | A 21 | S.காந்திமதி | 1,62,486 |

இந்நிலையில், மேற்படி கடைகளின் முன்புறம் ஆக்கிரமிப்பு செய்து அமைக்கப்பட்டுள்ள தகர கொட்டகைகளை அகற்றக் கோரி இந்நகராட்சி நகரமைப்பு பிரிவின் மூலம் பலமுறை நேரில் அறிவுறுத்தப்பட்ட நிலையில், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாததால் 08.12.2025 தேதியன்று நகரமைப்பு பிரிவின் மூலம் ஆக்கிரமிப்புகளை தாங்களாகவே அகற்றிக்கொள்ள அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டது.

அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டு மூன்று மாத காலமாகியும், கடைகளின் முன்புறம் உள்ள ஆக்கிரமிப்புகள் ஏதும் அகற்றப்படாத நிலையில், 09.03.2026 அன்று நகராட்சி மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றுவது தொடர்பாக ஒலி பெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு, இது தொடர்பான இறுதி ஆலோசனை கூட்டம் 06.03.2026 அன்று நடத்தப்பட்டது. மேற்படி இறுதி ஆலோசனை கூட்டத்தில் கடைகளுக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவையினை உடன் செலுத்துமாறும், கடைகளின் முன்புறமுள்ள ஆக்கிரமிப்பு கொட்டகைகளை தாங்களாகவே இரண்டு தினங்களுக்குள் அகற்றிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

இந்நிலையில், கீழ்கண்ட நகராட்சி கடையின் குத்தகைதாரர் வாடகை நிலுவை செலுத்தக்கோரியதில் மேற்கொண்டு தன்னால் கடை நடத்த இயலாததாகவும், கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பதாகவும், கடிதம் சமர்பித்துள்ளார்,

| வ. எண். | வரிவிதிப்பு எண் | கடை எண் | குத்தகைதாரர் பெயர் | நிலுவை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 057/SC03/00128 | A 11 | சுந்தரமூர்த்தி | 1,07,616 |

எனவே, மேற்கண்ட பூட்டி சீல் வைக்கப்பட்ட கடைகள் மற்றும் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட 5 கடைகளின் குத்தகைதாரர்கள் தங்களால் தொடர்ந்து கடை நடத்த இயலாததால் நகராட்சிக்கு கடையினை ஒப்படைப்பு செய்வதாகவும், தாங்கள் செலுத்திய முன்வைப்பு தொகையிலிருந்து செலுத்தப்பட வேண்டிய கடை வாடகையினை பிடித்தம் செய்து மீதத்தொகையினை திரும்ப வழங்க கோரியும் 07.03.2026 அன்று கடிதம் சமர்பித்துள்ளார்கள்.

எனவே, மேற்கண்ட கடைகளின் குத்தகைதாரர்களது முன்வைப்புத்தொகை மற்றும் ஒரு வருட வாடகை தொகையிலிருந்து நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவை கடை வாடகையினை பிடித்தம் செய்து மீதத்தொகையினை மனுதாரருக்கு திரும்ப வழங்கிடவும், மேலும் மேற்படி கடையினை 01.04.2026 முதல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1544**

2. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் நகரமைப்பு பிரிவில் 1950 ஆம் ஆண்டு முதல் 10.03.2026 வரை மனைப்பிரிவு உரிமையாளர்களால் ஆணையாளர் கோபிசெட்டிபாளையம் நகராட்சி பெயரில் தான பத்திரம் மேற்கொண்டு இந்நகராட்க்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீட்டு இடங்கள் குறித்த பத்திர பதிவு ஆவணங்கள் முறையாக பராமரித்து பாதுகாக்கும் பொருட்டும் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் "ஆணையாளர் கோபிசெட்டிபாளையம் நகராட்சி" பெயரில் வருவாய் ஆவணங்களில் பட்டா பெயர் மாற்றம் மேற்கொள்ளும் பொருட்டும் இது தொடர்பான அனைத்து பத்திர பதிவு ஆவணங்களை கணினியில் பதிவேற்றம் செய்யவும், கலர் நகல் ஒரு எண்ணிக்கை மற்றும் கருப்பு வெள்ளை நகல் இரண்டு எண்ணிக்கைகள் ஆகிய நகல்கள் எடுத்து மேற்காணும் பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பணிக்கு தனியார் கணினி நிறுவனம் வழியாக உள்ளூர் விலைப்புள்ளி கோரவும், குறைந்த விலைப்புள்ளியை குறிப்பிடும் நிறுவனத்தை ஏற்கவும், பத்திர பதிவு ஆவணங்களை நகல் எடுக்கும் பணிக்கு அனுமதி வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.2,00,000/–ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1545**

3. இந்நகராட்சிக்கு சொந்தமான மொடச்சூர் IUDP வாரச்சந்தை வணிக வளாக்கத்தின் கடை எண்கள் 16 முதல் 31 வரை உள்ள கடைகளை இடித்து அப்புறப்படுத்தி புதிய நகராட்சி அலுவலக கட்டிடம் கட்ட திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசிற்கு அனுப்பட்பட்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதற்கான நிர்வாக அனுமதி வழங்கக் கோரி உரிய பிரேரணைகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டு பரிசீலணையில் உள்ளதாக நகராட்சி பொறியியல் பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே புதியதாக கட்டப்பட உள்ள நகராட்சி அலுவலக கட்டிடத்தின் முகப்பு பகுதியில் செயல்பட்டுவரும் IUDP வாரச்சந்தை கடை எண்கள் 16 முதல் 31 வரை உள்ள கடைகளை காலி செய்து நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய சம்மபந்தப்பட்ட கடைகளின் குத்தகைதாரர்களுக்கு உரிய அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டு அதற்கான கலந்தாலோசணைக் கூட்டம் 02.02.2026 அன்று நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் கடை குத்தகைதாரர்கள் கடைகளை காலி செய்ய இரண்டு மாத கால அவகாசம் கோரியதன் அடிப்படையில் 31.03.2026 வரை கால அவகாசம் வழங்கவும் 01.04.2026 முதல் கடைகளை நகராட்சி வசம் எடுக்கப்பட உள்ளதால் வரும் நிதியாண்டான 2026–2027 ற்கு கேட்பு எழுப்பப்படாமல் இருக்க 01.04.2026 முதல் கீழ்கண்ட கடைகளின் வரிவிதிப்பு எண்களை நீக்கம் செய்யவும், கடைகளின் நிலுவை வாடகைத் தொகையினை குத்தகைதாரர்களின் முன்வைப்புத் தொகையிலிருந்து சரிகட்டிக் கொள்ளவும், மீதமுள்ள வாடகைத்தொகையினை வசூலிக்க சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | IUDP வாரச்சந்தை கடை எண்கள் | வரிவதிப்பு எண் | குத்தகை தாரர் கள் பெயர் | நிலுவைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 16 | 057/BD01/00085 | சய்னாஅஸ்மத் பானு | 47622 |
| 2 | 17 | 057/BD01/00114 | M.S.பூபதி | 14160 |
| 3 | 18 | 057/547 | ஈஸ்வரி | 11862 |
| 4 | 19 | 057/BD01/00030 | சீனிவாசன் | 11398 |
| 5 | 20 | 057/549 | G.M. பழனியப்பன் | 181014 |
| 6 | 22 | 057/BD01/00090 | K.M.சிலம்பரசன் | 30680 |
| 7 | 23 | 057/BD01/00092 | K.M.சிலம்பரசன் | 30680 |
| 8 | 24 | 057/BD01/00093 | M.சந்திரன் | 24544 |
| 9 | 25 | 057/BD01/00091 | M.சுந்தரேஸ்வரன் | 6195 |
| 10 | 26 | 057/BD01/00115 | M.P.சண்முகசுந்தரம் | 49560 |
| 11 | 27 | 057/556 | M.S.அல்லிமுத்து | 383931 |
| 12 | 28 | 057/557 | M.E,சிவக்குமார் | 58268 |
| 13 | 29 | 057/BD01/00115 | S.வேலுச்சாமி | 6242 |

(ந.க.எண்.3060/2016/அ3)

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1546**

4. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி மார்க்கெட், வாரச்சந்தை, உணவகங்கள், காய்கறி கடைகள், பழக்கடைகள், கோழிக்கறி கடை கழிவுகள் ஆகியவற்றிலிருந்து தினசரி சேகரிக்கப்படுகின்ற 3 MT கழிவுகளை இந்நகராட்சிக்கு சொந்தமான கரட்டூர் பகுதியில் உள்ள பயோ கேஸ் பிளாண்ட்ல் Gas மூலம் மின்சாரம் தயாரிக்கப்பட்டு அப்பகுதியில் உள்ள மின்மோட்டார்களுக்கு மின்சார பயன்பாட்டிற்கு வழங்கப்படுகிறது. எனவே, மேற்கண்ட பயோ கேஸ் பிளாண்ட்ல் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்து தினசரி பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே பயோகேஸ் பிளாண்டில் உள்ள பழுதுகளை சரிசெய்து பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 2026 – 2027 நிதியாண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1547**

5. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினந்தோறும் 18 MT திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு அவற்றில் 12 MT மக்கும் குப்பைகள் 3 நுண்ணுர செயலாக்க மையங்களில் முறையே ராமர் எக்ஸ்டென்சன் (4 MT), கரட்டூர் ( 3 MT, 2 MT) கொள்ளளவு கொண்ட நுண்ணுர செயலாக்க மையங்களில் மக்கும் கழிவுகள் அரைக்கப்பட்டு இயற்கை உரமாக தயாரிக்கப்பட்டு ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக இயற்கை உரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட 3 மையங்களில் பயன்படுத்தப்படும் அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் RRC மைய இயந்திரம், மின்கலங்கள் அவ்வப்போது பழுதடைந்து விடுவதால் அவற்றை உடனடியாக பழுதுநீக்கம் செய்து பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே அவசர அவசியம் கருதி 2026 – 2027 நிதியாண்டிற்கு பராமரிப்பு செலவினங்களை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.75 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1548**

6. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளுக்கு ஆகும் செலவினங்களுக்கு நகர்மன்ற தீர்மான எண். 1186 நாள்: 15.05.2025 இல் அனுமதி அளித்துள்ளதன் பேரில், காலை உணவு வழங்கும் திட்டம் தொடக்க விழாவினை மண்டபத்தில் 09.02.2026 அன்று ஏற்பாடு செய்து 262 நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்குகாலை விருந்து ஏற்பாடு செய்து, உணவினை வாழை இலையில் பரிமாறியும், இனிப்புகள் வழங்கியும், பிளக்ஸ் பேனர்கள், வாழைமரம், டேபிள் கிளாத் போட்டோ மற்றும் வீடியோ ஆல்பம் ஏற்பாடு செய்தமைக்கும் டிரம்ஸ் ஏற்பாடு செய்தமைக்கும் 11.02.2026-ம் தேதியன்று பெறப்பட்ட விலைபுள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விழா ஏற்பாடு செய்யும் பணிக்கு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | V.M. Kannadas,<br>(Event Management)<br>59 SDN Colony,<br>Gobichettipalaya- 638 476. | ரூ. 45,000/- |
| 2. | L.K.Designers,<br>Soundarapandian Street,<br>Vandepet,<br>Gobichettipalaya- 638 476. | ரூ.48,000/- |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள V.M. Kannadas, (Event Management) 59, SDN Colony, Gobichettipalayam - 638 476.என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்றறொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தினரிடம் இப்பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.753/2025/எச்1)

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1549**

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் நாய்கள் பராமரிப்பு மையம் (Animal Birth Control Centre) கட்டிடம் கட்டும் பணி செய்வதற்கு 12.03.2026 ஆம் தேதியில் விலைப்புள்ளி திறக்கப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள மொடச்சூர் வார்டுC - பிளாக் எண்.20 TS.No.15-இல் விலங்குகளின் பிறப்பு மற்றும் கட்டுப்பாடு (ABC) மையக் கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ளுதல். | ரூ.46,00,000 | திரு.P.தங்கவேல் ஒப்பந்ததாரர் | -0.05% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/S KS & CO CONTRACTOR | 2.84% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.P.தங்கவேல் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கு உத்திரவு கடிதம் வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2 மற்றும் 3 ஏற்கப்பட்டது தீர்மான எண்.1550**

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 12.03.2026 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–12 இல் உள்ள நகராட்சி அலுவலகத்தில் கூடுதலாக ஒரு அறை அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | ரூ.5,00,000 | M/s V.Thangaraj ஒப்பந்ததாரர் | –0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s K.Kulandaivel ஒப்பந்ததாரர் | 2.86% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s V.Thangaraj ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்கப்பட்டது தீர்மான எண்.1551**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தூய்மை பாரத திட்டம் 2022–2023 (SBM2.0) திட்டத்தின் கீழ் கரட்டூர் உரக்கிடங்கில் 4MLD STP & 20KLD FSTP கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.9.96 கோடி ஆகும். அப்பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்திரவு 18.05.2023 அன்று வழங்கப்பட்டு தற்போது 86% நடைபெற்று வருகிறது. இப்பணிக்கு அஸ்திவாரம் மண் வேலை நடைபெறும் பொழுது அப்பகுதியில் மரபு கழிவுகள் வரப்பெற்ற காரணத்தினால் கட்டிடத்தை உறுதி செய்ய கடினமான வடிவமைப்பு Anna University, திண்டுக்கல் மற்றும் சென்னை அவர்களிடம் பெறப்பட்டு பணி நடைபெறும் பொழுது இப்பணிக்கு கூடுதல் தொகை ரூ.5.00 கோடி தேவைப்பட்டது. அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் திருத்தப்பட்ட கட்டமைப்பு வடிவமைப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்பட்டதில் அதிகரித்த Steel Reinforcement மற்றும் மேம்படுத்தப்பட்ட Base Slab Thickness காரணமாக STP மற்றும் FSTPக்கான திட்ட செலவு ரூ.9.96 கோடியிலிருந்து ரூ.14.96 கோடியாக அதிகரித்து கூடுதல் செலவீனத் தொகை ரூ.5.00 கோடியினை (Minutes of the 12th State Level Technical Committee under Swachh Bharat Mission (U)2.0 – Tamil Nadu held on 24.02.2026 at 12.30 P.M in the Conference Hall of MAWS Department, 8th floor, Secretariat, Chennai.) கீழ்க்கண்ட நிதி பட்டியல் தொகையின் படி, வரப்பெற்று உள்ளது. இதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>நிதி விவரம்</u>

Rs.in Crore

| Name of the Work | Already Sanctioned amount in 5th SHPC | | | | Revised AS amount Placed for approval | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Project Cost | GoI Share | GoTN Share | ULB Share | Project Cost | GoI Share | GoTN Share | ULB Share |
| STP cum FSTP | 9.96 | 4.98 | 3.29 | 1.69 | 14.96 | 7.48 | 4.94 | 2.54 |

மேற்படி பணியின் செலவினத்தில் நகராட்சி பங்களிப்பு தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2 பதிவு செய்யப்பட்டது தீர்மான எண்.1552**

10. இந்நகராட்சிக்கு சொந்தமான MUDF பழைய பேருந்து நிலைய வணிக வளாக கடைகளை குத்தகைக்கு எடுத்து நடத்திவரும் கீழ்கண்ட விபரப்படியான குத்தகைதாரர்களிடம் கடைகளுக்குண்டான மாத வாடகைத் தொகையினை செலுத்தக் கோரி பல முறை நேரில் அறிவுறுத்தப்பட்டும், அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்ட நிலையிலும் நாளது வரை நிலுவை வாடகைத் தொகைகளை செலுத்தப்படாமல் இருந்து வந்த காரணத்தினால் கீழ்கண்ட விபரப்படியான கடைகள் இந்நகராட்சியால் 11.03.2026 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. நிலுவை வாடகைத் தொகைகளை செலுத்தக் கோரி உரிய கால அவகசம் வழங்கப்பட்டும் சம்பந்தப்பட்ட கடைகளின் குத்தகைதாரர்களால் தொகை ஏதும் செலுத்தப்படவில்லை.

இந்நிலையில் எதிர்வரும் நிதியாண்டான 2026-2027 ற்கான மாத வாடகை கேட்பு எழுப்பப்படாமல் இருக்க 01.04.2026 முதல் கீழ்கண்ட கடைகளின் வரிவிதிப்பு எண்களை நீக்கம் செய்யவும், நிலுவை வாடகைத் தொகையினை குத்தகைதாரர்களின் முன்வைப்புத் தொகையிலிருந்து சரிகட்டிக் கொள்ளவும், மீதமுள்ள வாடகைத் தொகையினை வசூலிக்க சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | MUDF பழைய பேருந்து நிலைய கடை எண்கள் | வரிவதிப்பு எண் | குத்தகை தாரர்கள் பெயர் | நிலுவைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 057/818 | அ.சம்பத் | 149808 |
| 2 | 22 | 057/838 | எஸ்.மணியன் | 117984 |
| 3 | 24 | 057/840 | ஆர்.துரைசாமி | 44944 |
| 4 | 27 | 057/843 | எஸ்.வி.வேணுகோபால் | 61800 |
| 5 | 28 | 057/844 | எஸ்.சீனிவாசன் | 117984 |
| 6 | 34 | 057/BD01 /00064 | கண்ணகி | 22656 |
| 7 | 53 | 057/BD01 /00065 | கண்ணகி | 22656 |
| 8 | 49 | 057/BD01 /00021 | P.வேணுகோபால் | 32568 |
| 9 | 62 | 057/878 | பெரியசாமி | 61992 |
| 10 | 63 | 057/879 | பெரியசாமி | 61992 |
| 11 | 64 | 057/880 | எஸ்.வேல்முருகன் | 51500 |
| பழைய பேருந்து நிலையக்கடை | | | | |
| 1 | 2 | 057/101 | எஸ்.கணேசன் | 61800 |
| 2 | 7 | 057/106 | கே.சுப்பிரமணியன் | 264039 |

ந.க.எண்.3060/2016/அ3

அலுவலகக்குறிப்பு:–

1. MUDF பழைய பேருந்து நிலைய வணிக வளாக கடைகளை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக வணிகவளாகம் கட்டப்பட உள்ளதால் மேற்படி கடைகளை பொது ஏலம் விடுவதிலிருந்து தவிர்க்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. 01.04.2026 முதல் கடைகளின் வரிவிதிப்பு எண்களை நீக்கம் செய்யலாம்.
3. நிலுவை வாடகைத் தொகையினை குத்தகைதாரர்களின் முன்வைப்புத் தொகையிலிருந்து சரிகட்டிக் கொள்ளவும், மீதமுள்ள வாடகைத் தொகையினை வசூலிக்க சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1553**

11. அரசாணை (நிலை) எண் . 629, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை (LDA(1), நாள் 16.09.2025 இல் அரசியல் கட்சிகள் மற்றும் இதர இயக்கங்கள் பொது இடங்களில் தற்காலிக கொடி கம்பங்கள் வைப்பதற்காக. பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து (SOP) வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு கோட்ட அளவிலான துணைக்குழு அமைத்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரசியல் கட்சிகள் மற்றும் பிற அமைப்புகள் தங்கள் சொந்த நிலத்தில் நிரந்தரக் கொடிக் கம்பங்களை உரிய துறையிடமிருந்து தேவையான அனுமதியைப் பெற்ற பிறகு நிறுவிக்கொள்ள அனுமதிக்கப்படும் அரசியல் கட்சிகள் தங்கள் பொதுக்கூட்டங்கள், தேர்தல் பிரச்சாரம், மாநாடுகள், ஊர்வலம், தர்ணா மற்றும் நிகழ்ச்சிகள் போன்றவற்றின் போது, சட்டத்தின்படி, உரிய வாடகை செலுத்தும் பட்சத்தில் நிலத்திற்கு சேதம் விளைவிக்காமல், தற்காலிகமாக கொடிக்கம்பங்களை அமைக்க சம்மந்தப்பட்ட அலுவலர்கள் அனுமதிக்கலாம்.

தற்காலிகக் கொடிக் கம்பம் அமைக்க அனுமதி / உரிமம் வழங்கப்பட்ட காலத்திற்குப் பிறகு, அனுமதி உரிமம் பெற்றவர், பொது இடங்களைச் சுத்தப்படுத்தி, துளைகள் இருப்பின் அவற்றை அதன் அசல் நிலைக்குத் திரும்பச் செய்திட வேண்டும் என்பதை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். ஏதேனும் சேதம் ஏற்பட்டால் அதற்கான செலவை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் செலுத்த வேண்டும். இவற்றை நடைமுறைப்படுத்த வருவாய் துறை நெடுஞ்சாலைத்துறை , நீர்வளத்துறை , வனத்துறை, போக்குவரத்து துறை உள்ளிட்ட அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு அரசு நிலங்களில் அமைக்கப்பட்டுள்ள கொடிகம்பங்களை அகற்றிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேற்காண் உத்தரவிற்கிணங்க கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட இடங்களில் தற்காலிகக் கொடிக் கம்பம் அமைக்க அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு வகுக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை (SOP) பின்பற்றி அனுமதி/உரிமம் வழங்க நாளொன்றுக்கு ஒரு கொடிக் கம்பம் அமைக்க ரூ.10/– வசூலிக்கலாம் எனவும் அனுமதியின்றி அமைக்கப்படும் கொடிகம்பங்களுக்கு நகராட்சி மூலம் அகற்றுதல் பணி மேற்கொள்ள ஒரு கொடிக் கம்பம்த்திற்கு ரூ.20/– அபராதம் விதித்து வசூலிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1554**

(ஒப்பம்) என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

//உண்மை நகல்//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி